முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மச்சமுனிவர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

15.10.2018, திங்கட்கிழமை

1. **குமரகிரி கொண்ட குருநாதா**
**குருபரன் துணைபட ஞானமதை**
**நேமமுடன் உலகோர் ஏற்றுத் தொடர**
**நீதி அரசனாக வந்த ஞானதேசிகா**
2. தேசிகனே தெளிவூட்டும் சற்குருவே
தெய்வீக ஞான உலகமதும்
ஆசி கூட உன் ஞானக் கொள்கையால்
அமையும் என்று கூறி இனிதே
3. இனிதே ஒளி சூட்சும நூலை
இயம்பிட **விளம்பி தரிவை திங்கள்**
**கனிவுபட இருபான் நவதிகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 29ம் நாள் 15.10.2018, திங்கட்கிழமை)**
**கணக்காய் மச்சமுனி யானும்**
4. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான கொள்கை கொண்டு
ஞானம் அருளி வருகின்ற
ஞானியரின் திருவடிகள் பணிய
5. பணியவே பணிவு துணிவு
பரோபகாரம் வளர்ந்து நன்கு
இனிமைபட வரும் மக்களுக்கு
எல்லா வரமும் கிட்டுமென்பேன்
6. என்கவே சுத்த சைவ நெறியே
இந்த யுகத்தை சுத்தம் செய்யவிருக்க
நன்மையென ஏற்றுத் தெளிந்து
ஞானதேசிகனை வணங்கும் மக்களே
7. மக்களே ஞானயுக வாழ்வும்
மரணம் வெல்லும் சூட்சுமமும்
ஆக்கமும் ஆறுமுகப் பெருமானால்
அழியாமையும் அடைவர் என்பேன்
8. என்கவே ஏழாம் படை வீடு
ஏழ்மை துன்பம் விரட்டி
நன்மை அருளும் முருகன் வீடு
ஞானிகள் குடிகொண்ட ஞான வீடு
9. ஞானவீட்டை நம்பி வந்துமே
நாட்டிடுவேன் சரணடைந்த மக்கள்
தானாக எல்லாத் தெளிவும்
தன்மையும் உயர் பக்குவமும் பெற்று

10. பெற்றுமே அரங்கன் ஆசிபட
பிரளயம் வெல்லும் அளவில்
ஆற்றல் கூடி சிறப்பர்
ஆளுமை மாந்தர்களும் நாட

11. நாடவே நல்சிந்தை உருவாகி
ஞானமுடன் நியாய வழி நடந்து
தடையிலா ஞான ஆட்சிக்கு
தகுதி சகல வாய்ப்பும் பெறுவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் மச்சமுனிவர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

குமரகிரி எனும் ஞானசபைதனை கொண்டிட்ட குருநாதனே அரங்கமகா தேசிகனே குருபரன் முருகப்பெருமானின் துணைபட ஞானம்தனை அன்புடன் உலகோர்க்கு அளித்து உலகோர் எல்லாம் தாம் அளிக்கும் ஞானஉபதேசங்களை ஏற்றுத் தொடர்ந்து நடந்திட வகை செய்து இவ்வுலகிற்கு நீதி அரசனாக வந்துதித்த ஞானதேசிகனே உலகின் அறியாமையை போக்கி ஞானத்தெளிவை அளித்து காக்கின்ற சற்குருநாதனே உலகினில் உமது ஞானக்கொள்கையாய் தெய்வீக ஞான உலகம் உம்மால் அமையும் எனக் கூறி உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 29ம் நாள் 15.10.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மச்சமுனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மச்சமுனிவர்.

ஜென்மத்தைக் கடைத்தேற்றி பிறப்பு இறப்பற்ற மரணமிலாப் பெருவாழ்வை தந்தருளும் வல்லமைமிக்க கொள்கையான அரங்கமகா தேசிகனின் உயர் ஞானக்கொள்கைகளை உலகிற்கு வழங்கி உலகினை ஞானவழி செலுத்தும் அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளை பணிந்து பயபக்தியுடன் வணங்கி வந்திட அவர்களுக்குள் பணிவும், துணிவும், பரோபகாரமும் வளர்ந்து பரிபக்குவம் பெருகி அவர்களுக்கு எல்லா வரமும் கிடைத்திடும்.

உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவநெறியில் நடக்கின்ற சுத்த சைவ நெறியே இந்த கலியுகத்தினை செய்ய இருக்கின்றபடியால் அத்தகை உயர்வான கொள்கைகளை நன்மை என ஏற்று தெளிந்து ஞானதேசிகனை வணங்குகின்ற மக்களே ஞானயுக வாழ்வினையும் மரணத்தை வெல்லும் சூட்சுமங்களையும், ஆறுமுகப் பெருமானால் அழியாமை எனப்படும் மரணமிலாப் பெருவாழ்வையும் அடைவார்கள் என்பேன்.

உலகப்பெருமாற்றம் நிகழ்த்திடவே சர்வ வல்லமையுடன் அமைக்கப்பட்ட ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடில் மக்களின் துன்பங்களை விரட்டி நன்மைகளை அருளும் முருகப்பெருமானின் வீடு ஞானிகள் எல்லாம் விரும்பி குடி கொண்ட ஞானவீடு.

ஆதலினால் ஞானவீடு துறையூர் ஓங்காரக்குடிலை நம்பி வந்து அரங்கன் திருவடியே கதியென சரணடைந்திட மக்களெல்லாம் தானாகவே எல்லாவிதமான மனத்தெளிவுகளையும், அறிவு தெளிவுகளையும் பெற்று உயர் பக்குவமும் அடைந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசியுடன் உலகினில் உண்டாகும் பிரளயப் பேரிடரிலிருந்தும் மீளும் ஆற்றல் பெற்று சிறப்படைவார்கள்.

ஆட்சி பொறுப்பில் உள்ள ஆட்சியாளர்களும் அரங்கமகா தேசிகனாரை அணுகி ஆசி பெற்றிட்டால் அவர்களிடம் நல்சிந்தை உருவாகி ஞானம் பெருகி நியாயத்தின் வழியில் நடந்து தடையற்ற மேன்மைமிக்க ஞானஆட்சிக்கு சகலவிதமான தகுதிகளையும் வாய்ப்புகளையும் பெற்று சிறப்படைவீர்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மச்சமுனிவர்.

–சுபம்–